தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆனி 7, திருவள்ளுவர் ஆண்டு—2055

2024 ஜூன் 21, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு."

பொதுநல நோக்குடன் வாழ்கின்ற பேரறிவாளனின் செல்வமானது ஊர் மக்கள் அனைவருக்கும் பயன் தரும் நீர் நிறைந்த ஊருணியைப் போன்றதாகும்.

(*அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் கருப்புச் சட்டை அணிந்து அவைக்கு வந்திருந்தனர்.*)

(*திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பி. அய்யப்பன், திரு. ஆர். வைத்திலிங்கம், திரு. பால் மனோஜ் பாண்டியன் ஆகியோர் அவையில் இல்லை.*)

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். (குறுக்கீடுகள்) வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன், (குறுக்கீடுகள்) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*